# இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதியில் பக்தி மாண்புகள்

திருமதி ச.கண்ணம்மாள்
Mrs. S. Kannammal

Manuscript received 25 September 2025
Manuscript accepted 15 October 2025
*Corresponding author/First Author

ஆய்வுச்சுருக்கம்

பக்திக்குரிய மொழியாகத் திகழும் தமிழ் மொழியின் கடவுள் முருகன். முருக வழிபாடு மிகத் தொன்மையான காலத்திலிருந்து இன்றுவரை மிகப் பெரும் அளவில் வணங்கத்தக்கதாகி, கொண்டாடப்பட்டு வருகின்றது. முருகனின் அருள் பெற்ற அடியார்கள் அருவ (பக்தி) உணர்வை உருவத்தில் (மொழியில்) கொணரச் செய்ததன் விளைவாக எண்ணற்ற நூல்கள் தோன்றின. அவற்றுள் கி.வா.ஜகந்நாதன் அவர்களால் படைக்கப்பட்ட இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி எனும் நூலும் சிறப்பிற்குரியது.

இந்நூலில் சுட்டப் பெறும் இரத்தினகிரியும் திருப்புகழில் சுட்டப்பெறும் ரத்னகிரியும் வேறு வேறாகும். கி.வா.ஜ அவர்கள் குறிப்பிடும் இரத்தினகிரி தவம் புரிபவர்கள் வாழ்கின்ற, கற்றவர்கள் போற்றும் தலமாக,பாவம் தீர்க்கும் பாலமுருகன் வீற்றிருந்து அருள்புரிகின்ற திருத்தலமாகும். இந்நூலாசிரியர் பாலமுருகனின் மீது காதல் வயப்பட்ட தலைவியாகி, காமனையும் காமுறச் செய்யும் அழகுடையவனாகிய முருகக் கடவுளின் அருட்பார்வைக்கு ஏங்கி நிற்பது, படிப்போரையும் ஏங்கி நிற்கச் செய்கிறது.

திறவுச் சொற்கள் : இரத்தினகிரி, முருகன், பக்தி, அவதாரம், கைக்கிளை, பயன், விண்ணப்பம்

*Abstract*

*Murugan is the god of the Tamil language, which is a language of devotion. The worship of Murugan has been worshipped and celebrated on a large scale since ancient times to this day. As a result of the devotees of Lord Murugan expressing the feeling of devotion in form (language), countless books have emerged. Among them, the book Ratnagiri Balamurugan Andathi, written by K.V. Jagannathan, is also noteworthy. The Ratnagiri mentioned in this book and the Ratnagiri mentioned in Thiruppugazh are different. The Ratnagiri mentioned by K.V.A.J. is a place where ascetics live, where scholars worship, and where the Lord Balamurugan, who forgives sins, resides and bestows his blessings. The author of this book, who becomes a hero who falls in love with Balamurugan and yearns for the divine gaze of Lord Muruga, a beauty that makes even the most lustful man lustful, makes the reader yearn as well.*

*Key words: Ratnagiri, Murugan, Devotion, Incarnation, Twig, Use, Application*

**முன்னுரை**

முருக வழிபாடு மிகத் தொன்மையானது என்பதற்கு சங்க இலக்கியங்களே சான்று. முதற்கடவுளாகிய முருகப் பெருமான் குன்றமெல்லாம் திருக்கோயிலாகக் கொண்டு அருள் புரிபவன். அத்தகு எழில் மிக்க முருகப் பெருமானை வணங்கிப் போற்றும் விதமாக பல்வேறு இலக்கிய வகை சார்ந்த எண்ணற்ற நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் 'இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி' நூலில் காணலாகும் பக்தி மாண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வு நெறி**

இந்த ஆய்வுக்கட்டுரை விளக்க முறையிலும் ஒப்பிட்டு முறையிலும் அமைந்துள்ளது. கி.வா. ஜகந்நாதன் அவர்களால் எழுதப்பெற்ற இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி என்ற நூலும் திருப்புகழும் முதன்மை

ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, தொடர்புடைய பிற நூல்கள் மற்றும் ஆய்வுக்குறிப்புகள் துணைமை சான்றுகளாகக் கொண்டு எழுதப்பெற்றுள்ளது.

**நூலாசிரியர் குறிப்பு**

கோபம் அறியாத குணக்குன்று; கலைமகள் இதழின் ஆசிரியர்; வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்களால் எழுதப்பெற்றது 'இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி' என்னும் இந்நூல். இவர் மிகச்சிறந்த முருகன் அடியார். "உ.வே.சா மற்றும் கி.வா.ஜ ஆகிய இவர்களின் பணிகளாலும் முயற்சியாலும் தான் தமிழன்னை புதுப்பொலிவு பெற்றாள்" என்ற கூற்று இவரின் தமிழ்ப்பணியை உலகிற்கு பறைசாற்றும்.

கி.வா.ஜ அவர்களின் 141 நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இவரின் 'திருமுருகாற்றுப்படை பொழிப்புரை' நூலை வியந்து "திருமுருகாற்றுப்படை அரசு" என்ற பட்டத்தினை இவருக்கு வழங்கினர். கதிர்காம யாத்திரை, கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகம்), பெரும் பெயர் முருகன், மருதமலை முருகன் அந்தாதி, காந்த மலை முருகன் பாடல்கள் ஆகியன இவரின் முருகப்பெருமான் சார்ந்த படைப்புகளாகும். காந்த மலை முருகன் பால் தீராக் காதல் கொண்டவர்; சிறந்த சொற்பொழிவாளர்.

**நூல் குறிப்பு**

இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி என்னும் இந்நூல் 1984 ஆம் ஆண்டு அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் வெளியீடாக வந்தது. ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளின் ஆசியுரையுடன் வெளிவந்த இந்நூல் உருவாக்கம் குறித்து, பாலமுருகன் அடிமை சுவாமிகள் நூலின் அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இந்த இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி, எவரைக் கொண்டு பணியினை நிறைவு செய்வது என்று யோசிக்கும் காலை, எந்தை அருளாளன் 'இவரைக் கொண்டு செய்' என்பது போல வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதனாரை எனது நினைவில் தேயாத நிறைமதியாய்த் தோன்றச் செய்தான்." கி.வா.ஜ அவர்கள் ஒரே நாளில் உபவாசம் இருந்து எழுதிய நூல்.அந்தாதிக்கு உரிய இலக்கணத்தோடு எழுதப்பட்ட 106 பாடல்களை உள்ளடக்கியது.

**இரத்தினகிரி தலத்தின் சிறப்பியல்புகள்**

'முருகன்' என்ற பெயர் சங்க இலக்கியங்களில் 9 இடங்களிலும் 'வேலன்' என்ற பெயர் 31 இடங்களிலும் இடம் பெற்றுள்ளதாக முனைவர் ம. தமிழ்வாணன் குறிப்பிடுகின்றார். அதுவன்றி 'முருகு' என்ற சொல்லாட்சியும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிகின்றது.

> "குன்றாத செல்வமும் கோதிலா நெஞ்சமும் கூடும் நண்பர்
> பொன்றாத நட்பும் பொலிவும் நின் பாதத்தைப் போற்றுவதும்
> என்றேனும் எக்காலும் நின்னை மறவா இயல்பும் அருள்
> நன்றா னவர்புகழ் ரத்ன கிரியை நயந்தவனே" (இரத்.பால.அந்.66)

இரத்தினகிரி என்னும் இந்நூலில் சுட்டப்பெறும் இம்மலை வேலூர் மாவட்டத்தில் உள்ளது. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பிறகு பாலமுருகன் அடிமை சுவாமிகளால் புனரமைப்புச் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. அருணகிரிநாதர் திருப்புகழில் இத்தலத்தைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுவர். இங்ஙனம் அவர் குறிப்பிட்ட இரத்தினகிரி என்பது கரூர் மாவட்டத்தில் உள்ள இரத்னகிரி (ஐவர் மலை) என்பதைத் தெள்ளிதின் அறிய வேண்டியுள்ளது.

இந்த மலை சிறந்ததோ? அல்லவோ? என்று தருக்கம் இல்லாத பெருமை உடைய மலை இந்த இரத்தினகிரி மலை என்று கி.வா.ஜ அவர்கள் குறிப்பிடுகின்றார். இரத்தினம் தங்கும் குன்றாத வான், ரத்ன தாழ் கிரி என்றழைக்கவும் பெறுகின்றது. அத்தகு பரிசுத்தமுடைய துங்கரத்தினகிரியில்

"சூரியனும் தாழ்ந்து வணங்கும் அப்பால முருகன்தன் தாள்உறுமே" - (இரத்.பால.அந்.20)

என்று பாடுகின்றார்.

மேலும், தவம் புரிபவர்கள் வாழும் இரத்தினகிரி, எல்லோருக்கும் காவலனாக இருக்கக்கூடிய முருகப்பெருமான் உரையும் இரத்தினகிரி, கற்றவர்களால் போற்றப்படும் தலமாக விளங்குதலையும் பாவம் எல்லாம் தீர்க்கும் தலமாகத் திகழ்வதையும் நூலின் வழி அறிய முடிகின்றது.

பாலமுருகனின் அருட் தோற்றம்

அகத்தியனார், சிவபெருமான், அருணகிரிநாதருக்கு குருவாக விளங்கிய முருகப்பெருமான், காருண்ய உருவமாக, சோதி உருவமாக, பரம்பரனாக எழுந்தருளியிருக்கின்றான்.

> "ஆயிரம் பேர்எனி னும்கவின் காலில் உளதாம்
> அந்தத் தூசினுக் கொல்லா ரெனின்எழில் சாற்றுமதோ?" ( இரத்.பால.அந்.16)

என்ற இவ்வடிகள் முருகப்பெருமானின் அழகினை எடுத்தோதுகின்றன. வள்ளி, தெய்வானையின் அன்பினைப் பெற்றவனாக இருப்பினும் இத்தலத்தில் பாலமுருகனாகவே காட்சியளிக்கின்றான். கிரவுஞ்ச கிரியாக நின்ற அசுரனை நீபமலர் (கடம்பமலர்) மாலை அணிந்து, கரத்திலே செஞ்சுடர் வேலேந்தி அழித்த வீரன். அவனின் திருவடிகள் தாமரை போன்ற செவ்விய திருவடிகள். அந்தத் திருவடித் தாமரை மலர்கள் எங்ஙனம் மனமாகிய கல்லில் மலரும் என்ற ஐயத்திற்கு தெளிவு திருப்புகழில் இருப்பதை, கி.வா.ஜ அவர்கள் தம்முடைய 'பெரும் பெயர் முருக' என்ற நூலில் பின்வருமாறு விளக்கிச் செல்கின்றார்.

"முருகன், குமரன், குகன் என்று விடாமல் அன்போடு மொழிந்தால் உள்ளம் உருகும்; அப்போது நெஞ்சத்தின் கனம் நீங்கும்; திண்மை ஒழியும்; அது கல்லின் தன்மையை இழந்து நீரின் தன்மையை அடையும்; அன்பினால் உருகிய உள்ளத் தடாகத்திலே இளமுருகன் பாதத் தாமரை மலரும்; தாளாகிய அணியார் அரவிந்தம் அலறும்." உளவியல் முறையிலான இக்கருத்து நெஞ்சக் கல்லை உருகச் செய்யும் ஆற்றைக் கற்பிக்கின்றது.

மேலும், கரைத்த நற்சாந்தினிலே ஆடிக் களிப்புறும் இன் முகத்தை உடையவன்; முருகப்பெருமான் கோழிக் கொடியை உடையவன்; பகைவனுக்கும் அருள் பவன் ; வேலன் வெறியாடும் இடத்திலே வந்து அருள் பவன்; பற்றுக் கோடானவன்; என்றும் ரத்தினகிரியில் உறைபவன்; அவன் உருவைக் கண்டு அருளப் பெறுதலை அடியார்களின் விருப்பமாகும்.

> "திருவுருப் பாலமுருகன் அடிமைக்குத் தேசு பெற அருளிய நாதன் அருள் உறின் வாரா தவை உளவோ?"( இரத்.பால.அந்.14)

என்ற இவ்அடிகள் பாலமுருகனின் அருட் தன்மையை விளக்குவதாக அமைந்துள்ளன.

**முருகப்பெருமானின் அவதாரம்**

திருஞானசம்பந்தர் முருகப் பெருமானின் அவதாரமாகக் கருதப்படுகிறார். அருணகிரிநாதர் தம் திருப்புகழில் அதிக இடங்களில் இக்கருத்தினைப் பதிவு செய்கிறார்.

அதனை அடியொட்டியே கி.வா.ஜ அவர்களும் தன் நூலில்

> "தவத்தால் சிறந்த திருஞான சம்பந்தர் தான் முருகன் அவதாரம் ....." ( இரத்.பால.அந்.68)

என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

> "சேய் குகன் கார்த்திகை மாதர் தருபால் தெவிட்டியதால் ஆய்தரு பாலைக் குடித்தான் இரத்ன அருள்கிரியில்" (இரத்.பால.அந்.17)

என்ற அடிகளின் வழி மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

> ‘‘வேல் பட்ட அழிந்தது’’ என்றதனை
> "அதிசயம் அன்று; நம் தலைமேல் எழுத் தற்றிடுமே" ( இரத்.பால.அந்.24)

இரத்தினகிரி பாலமுருகனை வணங்கினால் நம் தலையெழுத்து மாற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

**சிறந்த தவம்**

*கற்றதனால் ஆய பயன் இறைவன் திருவடியை சேர்தல். அதற்கான அறிவைப் பெற முயற்சித்தல் வேண்டும்.*

*"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்" (திருக்.280).*

*புறத்தோற்றத்தால் தவவேடத்தில் இருப்பதைக் காட்டிலும் உலகம் பழிக்கும் செயல்களைச் செய்யாமல் இருத்தலே சிறந்த தவம் என்பது வள்ளுவம். சிறந்த தவமியற்றிப் பாவத்தைப் போக்க வேண்டும். அத்தகு பாவத்தைப் போக்க கானகம் சென்று இலை, தழைகளை உடுத்தி எளிமையாக வாழ முறப்பட வேண்டும். அது எளிதான செயலன்று நேரத்தை வீணடிக்காமல் இறைவனை வணங்குதலே சிறந்த தவம் என்கிறார் நூலாசிரியர்.*

**கைக்கிளை ஏக்கம்**

*இறைவனின் மீதான பக்தியை அடியார்கள் நாயக நாயகி பாவத்தில் வெளிப்படுத்தியிருத்தலைப் பக்தி இலக்கியங்களில் அதிகமாக காண முடிகின்றது.*

*கி.வா.ஜ அவர்களும் இரத்தினகிரி பாலமுருகன் பால் காதல் வயப்பட்ட தலைவியின் மனநிலையைப் பெற்றவளாகத் தன் உணர்வை வெளிப்படுத்துகின்றார்.*

*"பால்என் பதுமொழி; பஞ்சென் பதுகால்; பதுமலர்க்*

*கோலம் முகம்என் றரிவையர் காமத்தைக் கொண்டு நின்றேன்*

*நின்னைப் புகழ்ந்து ஏத்துதற்கு ஒர்சொல் இயம்புவையே"( இரத்.பால.அந்.80)*

*'அரிவை' என்னாது 'அரிவையர்' காமத்தைக் கொண்டு நின்றேன் என்ற அடி அவரின் உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு மிகச் சிறந்த சான்றாகின்றது. காமத்தால் (பக்தியால்) நிறைந்த தலைவி செய்வதறியாது அரற்றுகின்றாள்.*

*"ஓரொருகால் வாய் விட்டு நம்பெருமான் என்றே ஓலம் இடும்;*
*சீரொருகால் ஓவாமல் நெஞ்சில் நினைப்பாள்; சிவன் தருசேய்*
*ஈரமுடன் அருள் செய்குவன் கொல்லோ? என அழுவாள்;*
*வேருடைப் பால முருகஇப் பேதையைப் பேணுவையே"( இரத்.பால.அந்.39)*

*இங்ஙனம் புலம்பிக் கொண்டிருக்கும் தலைவி,தன் தலைவனாகிய பாலமுருகனை காணாது பசலை நோய்க்கு ஆட்படுகின்றாள்.*

*"தாங்குறை சொல்லத் தமர் குறை சொல்லத் தனிமையினால்*

*நோய்பெற்று வாழும்இந் நேரிழைக் குன்அருள் நோக்கு தவுவாய்" (இரத்.பால.அந்.36)*

*பொதுவாக இறைத்தூது இலக்கியங்களில் தலைவி தலைவனிடமிருந்து மாலை பெற்று வரும்படி வேண்டுகோள் விடுப்பாள்.இவ்விடத்து தலைவி முருகப்பெருமானின் அருள் பார்வையைப் பெற தவித்து தன் நெஞ்சைத் தூதாக அனுப்புகிறாள்.*

*மேலும், முருகன் விருப்பால் அனைத்தும் துறந்து, மறந்து, செயலற்ற நிலையை, ஒளியிழந்திருத்தலைப் புலப்படுத்தி அருள் வேட்கிறாள்.*

*"காண்கிலன் யாரையும்;ஊனும் வெறுத்தனள்; கைவளைகள்*
*பூண்கிலள்; சற்றும் துயில்கிலள்; ரத்னப் பொருப்பனை*
*ஒண்பெறக் கண்டிலன்; என்செய்குவேன்? என ஏங்குகிறாள்;*
*சேண்பெறும் சீருடை வேலவ னேஅருள் செய்குவையே" ( இரத்.பால.அந்.47)*

இவ்வாறு தம்முடைய ஒருதலைக் காதலைத் தெரிவித்து, நெஞ்சத்தைத் தூதாக அனுப்பி, இரத்தினகிரி பாலமுருகனின் அருள்பார்வைக்கு ஏங்கி நிற்கிறாள் தலைவி. மேற்கூறப்பட்ட ஒவ்வொரு அடியிலும் கி.வா.ஜ அவர்களின் பக்தி ஏக்கத்தை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**பயனும் விண்ணப்பமும்**

காருண்யான முருகப்பெருமான் அடியவர்களின் துயர் போக்கி, காத்திரச் செய்யாமல் உடனே அருள்பவன். அத்தகு அருள் பெறுதலே தலையாய பயன். இரத்தினகிரி பாலமுருகனை வழிபட பற்றற்ற நிலை உருவாகும்; பெரும்படையைக் கொண்ட வேலனை வணங்கினால் கோள்களின் செயல்கள் நம்மைப் பாதிக்காது; அச்சம் அகன்று விடும்.

"குரு எனப் போற்றி வணங்கிடின் இன்பம் குவவுறுமே" ( இரத்.பால.அந்.5)

குருவாக மனத்திலிருத்தி வணங்கினால் இன்பம் குவியும்; எம பயம் அண்டாது; விதியை வெல்ல முடியும்; வீடு பேற்றைப் பெறலாம்.

"பற்றறும்; வீடும் பெறலாம்; இது பலர் பார்த்தன்றே" ( இரத்.பால.அந்.25)

அனைத்திற்கும் மேலாக முருகப்பெருமானின் தண்டை, பரஞானத்தைத் தரவல்லது.

"என்றேனும் எக்காலும் நின்னை மறவா இயல்பும் அருள்;

நன்றா னவர்புகழ் ரத்னகிரியை நயந்தவனே" ( இரத்.பால.அந்.66)

இப்பாடல் அபிராமி பட்டரின் பாடலோடு ஒப்பு நோக்கத் தக்கதாக உள்ளது. கி.வா.ஜ அவர்கள் இன்னும் சில விண்ணப்பங்களைப் பதிவிடுகின்றார்.

உள்ளத்தில் அமைதியைத் தர வேண்டும்; நல் மனத்துடை தூயவரோடு இணங்க அருள்புரிய வேண்டும்; அத்தகு உள்ளத் தூயவரை கண்டால் காலில் விழுந்து பணிவோடு வணங்கும் மனத்தைத் தர வேண்டும்.

"கரவறி யாத உளத்தினைக் கண்டவர் காலில் விழுந்
துரம்பெற வேஅருள் ரத்ன கிரிஉறை உத்தமனே" ( இரத்.பால.அந்.78)

எப்போதும் முருகப்பெருமான் இருந்து அருள் புரிகின்ற தலங்கள் யாவற்றையும் கண்டு வழிபட அருளல் வேண்டும் என்றவாறு விண்ணப்பித்து வரும் ஆசிரியர் முத்தாய்ப்பாக குலசேகர ஆழ்வாரைப் போன்று இரத்தினகிரியில் உருகும் ஒரு கல்லாக வேணும் ஆக அருள் செய்வாய்.

"இவன் எவன் என்றும் பாராமுகமாய் இருந்துவிடின் நான் என்ன செய்வேனோ? என்று ஓலமிட்டு இறைஞ்சுகின்றார்.

"குன்றாத அன்பும் கொடுமைசெய் யாதகுணமும், மயல்
ஒன்றாத உள்ளமும் உன்பால் அமையும் உயர் பக்தியும்
நின்றோ நிலவ நினதருள் தந்து நிலை பெறச் செய்!
பொன்றாப் புகழ்ரத்ன வெற்புரை நின்மல பூரணனே" ( இரத்.பால.அந்.86)

**முடிவுரை**

இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதியில் பக்தி மாண்புகள் என்னும் தலைப்பிலான இக்கட்டுரை கீழ்க்காணும் முடிவுகளைத் தருகின்றன.

- *முருக வழிபாட்டினை மேம்படுத்தும் நூல்களில் கி.வா.ஜ அவர்கள் இயற்றிய இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி என்னும் இந்நூலும் ஒரு மணியாகத் திகழ்கின்றது.*
- *இந்நூல் ஆசிரியரின் பக்தி வெளிப்பாடு, நூலாக்கம்,எளிய சொற்களைப் பயன்படுத்திய திறம் ஆகியன போற்றத்தக்கதாக உள்ளன.*
- *பரம்பரன்,வேதன்,தவர், அருட்பெயல்,புங்கவன் முதலான சொல்லாட்சிகள் இவரின் தனித்துவத்தை விளக்குவதாக அமைகின்றன.*
- *அகத்தூய்மை உடையவர்கள் உலகில் அருகி வருதலைப் பதிவு செய்யும் நூலாசிரியர், அனைவருக்கும் அமைதியையும் அகத்தூய்மையையும் தந்தருள பாலமுருகனை வேண்டுவது உலகியலை எடுத்துக்காட்டுகிறது.*
- *முன்னோர் மொழிந்த பொருளை மட்டும் பொன் போல் போற்றாமல் அவர்கள் கையாண்ட சொற்களையும் பாதுகாத்து தலைமுறைகளுக்குக் கடத்த வேண்டும் என்ற கி.வா.ஜ அவர்களின் கருத்து ஏற்கத்தக்கதாக உள்ளது.*
- *சங்க இலக்கியங்கள், தேவாரம்,திருவாசகம், கந்தர் அனுபூதி, திருக்குறள், அபிராமி அந்தாதி, திருப்பாவை, திருவெம்பாவை முதலான இலக்கியங்களின் சாயலை ஒருசேர இந்நூலில் உணர முடிகின்றது.*
- *திருப்புகழ் கற்க சற்றே திகைப்பவர்களுக்கு கிடைத்த இன் சுவை மருந்து இந்நூல். பாமரனின் ஏக்கத்தை அந்தப் படைவீட்டோனிடம் கொண்டு சேர்க்கும் என்பது திண்ணம்.*
- *நூலில் காணலாகும் சிலேடை நயம், பழமொழி வழக்காறுகள், இலக்கிய நயங்கள் முதலானவை மேலாய்விற்கு உரிய பொருண்மைளாகின்றன.*

***சான்றாதாரங்கள்:***


- *இலட்சுமணன் சி.கி. தமிழ்இலக்கியவரலாறு: கிருஷ்ணாவெளியீடு 7,பிரகாஷ்நகர், திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி - 13*
- *செங்கல்வராயபிள்ளை (உ.ஆ) திருப்புகழ்: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 522,டி.டி.கே.சாலை,ஆழ்வார்பேட்டை,சென்னை – 18.*
- *பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள்: அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.*
- *தமிழ் வாணன் ம. (2018) தொல் தமிழில் முருகு: பதிவுகள் ISSN 1481 – 2991*
- *ஜகந்நாதன் கி. வா. இரத்தினகிரி பாலமுருகன் அந்தாதி :*
- *அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில் வெளியீடு, இரத்தினகிரி,கீழ்மின்னல்.*
- *ஜகந்நாதன் கி. வா. தமிழ்மணிகள் : தினமணி தொகுப்பு*
- *ஜகந்நாதன் கி. வா. (1968) பெரும் பெயர் முருகன் : அமுத நிலையம் லிமிடெட், சென்னை.*